03. கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வி அமைச்சுகளினால் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்பாடுகளை செயற்படுத்தும் நோக்கில் பாடசாலைகளை வலுப்படுத்துவதற்கும், அச் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கும், மேற்பார்வை செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

04. பாடசாலையின் தேவைகள் மற்றும் சுற்றாடலுக்கு பொருத்தமான பல்வேறுபட்ட ஆசிரிய தொழில்சார் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தற்போது அமுலில் உள்ளன. அவற்றிற்கு துணையாக அமையும் பல்வேறுபட்ட நுட்பங்கள் மற்றும் செயற்பாடுகள்: உதாரணமாக ஆசிரியர் ஒன்றுகூடல், அடிக்கடி நிகழ்த்தும் சிறு குழுக் கூட்டங்கள் (ஆசிரியர் தேவைகளுக்கேற்ப), ஆசிரியர் அபிவிருத்தி தேவைகளுக்கு பொருத்தமான வகையில் புற உதவிகளுடன் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்கள், கூட்டுப் பயிற்சி (Peer Coaching), பாடசாலை அடிப்படையான ஆன்மீக நிபுணர் ஒருவரது வழிகாட்டல் (Mentoring), செயல்விளக்க கற்பித்தல் (Demonstration), தனிப்பட்ட வழிகாட்டல் (Individual Guidance), செயல்வழி ஆய்வு, விடய ஆய்வு மற்றும் கள அவதானிப்பு/அனுபவம் என்பவற்றை தம்மிடையே பரிமாரிக்கொள்ளும் வேலைத்திட்டங்கள் (Sharing Experience) போன்றவற்றினை குறிப்பிடலாம். ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஆசிரியர்கள் கலந்துகொள்ளுதல் பாடசாலைச் செயற்பாடுகள் சிறந்த முறையில் முன்னேற்றம் காண்பதற்கு காரணமாக அமைவதோடு கட்டாயமாக சகல ஆசிரியர்களையும் இதில் கலந்துகொள்ளச்செய்வது அதிபரினது பொறுப்பாகும்.

05. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் ஆலோசனை வழிகாட்டி ஒன்று சகல பாடசாலைகளுக்கும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அவ் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் விரிவாக்க மானியம் (School Based Learning Enhancement Grant - SBLEGs) வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பத்மசிறி ஜயமான்ன
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் :

| | | |
|---|---|---|
| 1. | சகல மாகாண பிரதம செயலாளர்கள் | - தய. நடவடிக்கைக்காக |
| 2. | சகல மாகாண கல்விச் செயலாளர்கள் | - தய. நடவடிக்கைக்காக |
| 3. | சகல மேலதிக செயலாளர்கள், கல்வி அமைச்சு | - தய. நடவடிக்கைக்காக |
| 4. | சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், | - தய. நடவடிக்கைக்காக |
| 5. | பிரதம நிதி அலுவளர், கல்வி அமைச்சு | - தய. நடவடிக்கைக்காக |
| 6. | பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி), கல்வி அமைச்சு | - தய. நடவடிக்கைக்காக |
| 7. | சகல கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சு | - தய. நடவடிக்கைக்காக |
| 8. | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் | - தய. நடவடிக்கைக்காக |
| 9. | சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் | - தய. நடவடிக்கைக்காக |
| 10. | சகல தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகள் | - தய. நடவடிக்கைக்காக |
| 11. | சகல ஆசிரியர் கல்லூரி அதிபர்கள் | - தய. நடவடிக்கைக்காக |
| 12. | சகல ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர்கள் | - தய. நடவடிக்கைக்காக |
| 13. | கணக்காய்வாளர் நாயகம் | - தய. தகவலுக்காக |
| 14. | உள்ளக கணக்காய்வாளர், கல்வி அமைச்சு | - தய. தகவலுக்காக |